## வாரத்தில் ஓர் முத்து!

02 பெப்ரவரி 2010 சகரியா பூணன்

# 40. நித்தியத்திற்கு தரவேண்டிய மதிப்பை நாம் இழந்திடக்கூடாது!

ஒரு குருடன் தன் கையில் கிடைத்த ஆயிரம் ரூபாய் காசோலையை தூக்கி எறிந்துவிட்டு, எந்த மதிப்பும் இல்லாத ஓர் பளபளப்பான பேப்பரை மடித்து வைத்துக்கொண்டான்! ஏனென்றால் அந்த பேப்பர்தான் தொடுவதற்கு வழுவழுப்பாயும், அவனுக்குப் பிரியமாயும் தென்பட்டது!! அவன் குருடனாய் இருந்தபடியால் "உண்மையான மதிப்பிற்கு" உணர்வற்றவனாய் இருந்தான். அது போலவே, இரண்டு வயது குழந்தையும் நூறு ரூபாய் தாளை உதறி விட்டு ஓர் மலிவான பொம்மையை எடுத்துக்கொள்கிறது! இந்தக் குழந்தையும் "உண்மையான மதிப்பைக் குறித்த" அறியாமையில் இருக்கிறது. ஏனென்றால், குழந்தைக்கு வளர்ச்சி இருப்பது இல்லை!!

மனிதன் ஆவிக்குரிய குருடனாகவே பிறந்திருக்கிறான். ஆகவேதான் அவனவன் தன்தன் காலத்தில் 'அவன் கருதும்' மதிப்புள்ளவைகளை, நித்தியத்தின் மதிப்புள்ளவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் திறனை இழந்தவனாய் இருக்கிறான். அதன் விளைவாய், அவன் தன் நேரத்தையும், தன் சக்திகளையும் இந்த உலகில் அவன் மதிப்பிடும் ஆஸ்தி, அந்தஸ்து மற்றும் உள்ள உலக இன்பங்களைத் தேடுவதற்கென்றே செலவழித்து சீரழிந்து போகிறான். சத்திய வேதம் குறிப்பிடுகின்ற "காணப்படுகிறவைகள் (அனைத்தும்) அநித்திய மானவைகள்; காணப்படாதவைகளோ (அவைகள் மாத்திரமே) நித்தியமானவைகள்" (2கொரிந்தியர் 4:18) என்ற சரியான உணர்வு அவனுக்கு சிறதளவுகூட இருப்பதில்லை! ஆண்டவராகிய இயேசு, தன் காலத்தில் வாழ்ந்த பக்தியுள்ள ஜனங்களிடம்கூட "தவறாக மதிப்பிடும் உணர்வு" இருந்ததைக் கண்டு அவர்களை வெகுவாய் கடிந்து கொண்டார். அவர்களைத் துயரத்தோடு பார்த்து, "ஒரு மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தி விட்டால் அதினால் அவனுக்கு எந்த இலாபமும் இல்லையே!" என கூறினார். இவ்வுலகில் உள்ள எந்த மனுஷனானாலும், இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு சரியான உறவைப் பெற்று நித்தியத்தின் மதிப்பை கண்டடைய வேண்டும்! அப்படியில்லையென்றால், ஒருநாளில் தன்னை சிருஷ்டித்த கர்த்தாவுக்கு முன்பாக நிற்கப்போகும் வேளையில், இந்த பூமியிலிருந்து அவன் சாதித்து, தனக்கென சொந்தமாக்கிக் கொண்ட அனைத்தும் "ஒன்றிற்கும் மதிப்பில்லாதவைகள்" என்ற உண்மையைக் கண்டு திகைத்துப் போவான்!! இது நிச்சயம்.

தமிழ் வடிவம் : T. ரத்தினகுமார்

© Zac Poonen ( 2009 )